போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

AUGUST 28, 1923.

ந. 10(2).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம் ௵ ஆகஸ்டு௴ 28௳. [விலை, 9 பை.

சென்னைச் சட்ட நிரூபண சபையாரின் ஆக்ட்.

ACT OF THE LOCAL LEGISLATURE OF MADRAS.

சென்னைச் சட்ட நிரூபண சபையாரால் செய்யப்பட்ட ஆக்ட்.

இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 81-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவில் கண்டிருக்கும் நிபந்தனைகளை அனுசரித்து, சென்னைச் சட்ட நிரூபண சபையாரால் செய்யப்பட்ட அடியிற்கண்ட ஆக்டானது - 1923-ம் ௵ பெப்ரவரி௴ 21௳ கவர்னரவர்களாலும் 1923-ம் ௵ மார்ச்௴ 12௳ கவர்னர் ஜெனரலவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டு, இதனால் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தம் செய்யப்படுகிறது :—

ACT No. VIII OF 1923.

1923-ம் ௵த்து 8-வது ஆக்ட்.

AN ACT TO AMEND THE LAW RELATING TO SURVEY OF LANDS AND SETTLEMENT OF BOUNDARY DISPUTES.

நிலங்களை ஸர்வே செய்வதற்கும் எல்லைத் தகரார்களைப் பைசல் செய்வதற்கும் சம்பந்தப்பட்ட சட்டதிட்டத்தைத் திருத்துவதற்கான ஆக்ட்.

பீடிகை.

நிலங்களை ஸர்வே செய்வதற்கும் எல்லைத் தகரார்களைப் பைசல் செய்வதற்கும் சம்பந்தப்பட்ட சட்டதிட்டங்களைத் திருத்தி ஒன்றுயச் சேர்ப்பது யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்தியா கவர்ன்மெண்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 80-A பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கப்படுகிறதென்னவென்றால் :—

1-ம் அத்தியாயம்.

பீடிகா விதிகள்.

பெயர்.

1. (1) இந்த ஆக்டை, 'ஸர்வேயையும் எல்லைகளையுங் குறித்த சென்னபட்டணம் 1923-ம் ௵த்து ஆக்ட்' என்று சொல்லலாம்.

வியாபிக்கும் இடம்.

(2) இது சென்னபட்டணம் ப்ரெஸிடென்ஸி முழுமைக்கும் வியாபிக்கின்றது.

ரத்து.

2. ஸர்வேயையும் எல்லைகளையும் குறித்த சென்னபட்டணம் 1897-ம் வருஷத்து ஆக்ட் இதனால் ரத்துசெய்யப்படுகிறது. **சென்னபட்டணம் 1897-ம் வருஷத்து 4-வது ஆக்ட்.**

அர்த்தம் கூறும் பகுதி.

3. இந்த ஆக்டிலே, சங்கதியினாலாவது முன்பின் தொடர்ச்சியினாலாவது விரோதமொன்றுமில்லாவிட்டால்,—

(i) ‘பூஸ்திதி’ என்பது—

‘பூஸ்திதி.’

(a) ஜமீன்தாரியாயிருந்தாலும் ஜாகீராயிருந்தாலும் மிட்டாவாயிருந்தாலும் பாளையமாயிருந்தாலும் நிலையாய்ப் பைசலாதியான யாதொரு பூஸ்திதியென்றும்,

(b) நிலையாய்ப் பைசலாதியான அப்படிப்பட்ட பூஸ்திதியிலே கலெக்டராபிஸில் பிரத்தியேகமாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கும் யாதொரு பாகமென்றும்,

(c) பைசலாதியாகாத யாதொரு பாளையம் அல்லது ஜாகீரென்றும்,

(d) ப்ரிடிஷ் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்பட்ட அல்லது ஊர்ஜ்ஜிதஞ் செய்யப்பட்டிருக்கிற யாதொரு இனாம் கிராமமென்றும்,

(e) மேலே (a), (b), (c) குறிப்பிட்ட பகுதிகளிலே குறிப்பிடப்பட்ட பூஸ்திதிகளில் யாதொன்றைச் சேர்ந்த ஒரு கிராமமோ அல்லது பல கிராமங்களோ அடங்கிய யாதொரு பாகமானது நிலையான கீழ்குத்தகையாகக் கைப்பற்றியிருக்குமானால் அப்படிப்பட்ட யாதொரு பாகமென்றும்

அர்த்தமாகும்.

‘கவர்ன்மெண்ட் நிலம்.’

(ii) ‘கவர்ன்மெண்ட் நிலம்’ என்பது - யாதொரு பூஸ்திதியாகவாவது அதன் யாதொரு பாகமாகவாவது ஏற்படாத யாதொரு நிலமென்று அர்த்தமாகும்.

‘நிர்ணயிக்க.’

(iii) ‘நிர்ணயிக்க’ என்பது - இந்த ஆக்டின்படி செய்யப்பட்ட விதிகளினால் நிர்ணயிக்க என்று அர்த்தமாகும்.

‘பூஸ்திதிக்குடையவர்.’

(iv) ‘பூஸ்திதிக்குடையவர்’ என்பது - யாதொரு பூஸ்திதி எவ்விடத்திலிருக்கிறதோ அந்த டிஸ்ட்ரிக்ட் கலெக்டருடைய ஆபிஸில் அந்தந்த காலத்திலே யார் பெயரில் அந்த பூஸ்திதி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிறதோ அந்த நபரென்றும், (i) குறிப்பிட்ட உட்பிரிவின் (e) அடையாளமிட்ட பகுதியிற்கண்ட பூஸ்திதி விஷயமாக, அதன் கைப்பற்றுதாரரென்றும் அர்த்தமாகும்.

‘ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரர்.’

(v) யாதொரு கவர்ன்மெண்ட் நிலத்தின் ‘ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரர்’ என்பது - கிராமத்தைச் சேர்ந்த ஸர்க்கார் கணக்குகளில் பிரஸ்தாப நிலமானது யார் பெயரில் ரெஜிஸ்டராயிருக்கிறதோ அந்த நபரென்று அர்த்தமாகும் :

ஆனால், ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரர் அல்லாத வேறே யாதொரு நபர் ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரரின் ஏஜெண்ட் அல்லது வேலைக்காரராகவாவது கொதுவைதாரர் அல்லது குத்தகைதாரராகவாவதன்றி மற்றப்படி கவர்ன்மெண்ட் நிலத்தை சட்டப்படி நிர்வாகம் செய்துவருகிறபட்சத்திலே, அப்படிப்பட்ட கவர்ன்மெண்ட் நிலத்தின் விஷயமாய் அந்த நபர் ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரராக எண்ணப்படுவார்.

கூட்டாக ரெஜிஸ்டராயிருக்கும் விஷயத்தில் ‘பூஸ்திதிக்குடையவர்’ அல்லது ‘ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரர்.’

(vi) யாதொரு பூஸ்திதியாவது கவர்ன்மெண்ட் நிலமாவது கூட்டாக இரண்டு அல்லது பல நபர்களுடைய பெயர்களில் மேலேகண்டபடி ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கிற விஷயத்திலே, இந்த ஆக்டின் காரியங்களுக்காக, சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த பூஸ்திதிக்குடையவராவது ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரராவது - அந்த பூஸ்திதியின் நிர்வாக கர்த்தராக மற்றக் கூட்டுக் கைப்பற்றுதாரர்களால் அங்கீகரிக்கப்பட்ட நபராவார், அல்லது விவாதமுண்டாகிற விஷயத்திலே, கலெக்டரால் தலைமையான கூட்டுக் கைப்பற்றுதாரராக அங்கீகரிக்கப்பட்ட நபராவ்ார்.

‘ஸர்வே.’

(vii) ‘ஸர்வே’ என்பதில், யாதொரு எல்லை அல்லது எல்லைகளையாவது எல்லையின் யாதொரு பாகத்தையாவது தீர்மானிப்பதற்கும் அளப்பதற்கும் (ரெகார்ட்) பதிவுசெய்வதற்கும் சம்பந்தமான எல்லா வேலைகளும் அடங்கும் ; மேலும், ரீ ஸர்வே (மறுபடியும் ஸர்வேசெய்வது) என்பதும் அதில் அடங்கும்.

‘ஸர்வே அடையாளம்.’

(viii) ‘ஸர்வே அடையாளம்’ என்பது - யாதொரு குறி அல்லது குறிகளின் இடத்தையாகிலும் மட்டத்தையாகிலும் காட்டவோ அல்லது நிச்சயிக்கவோ அல்லது நிச்சயிக்க உதவியாகவோ யாதொரு ஸர்வே ஆபிஸரால் அமைக்கப்பட்டாவது ஏற்படுத்தப்பட்டாவது உபயோகப்படுத்தப்பட்டாவது குறிப்பிடப்பட்டாவது இருக்கிற யாதொரு அடையாளம் அல்லது வஸ்து என்று அர்த்தமாகும்.

'ஸர்வே ஆபிஸர்.'

(ix) 'ஸர்வே ஆபிஸர்' என்பது - 4-வது பிரிவின்படி ஸர்வே ஆபிஸராக இருக்கும்படி நியமிக்கப்பட்ட யாதொரு நபரென்று அர்த்தமாகும்.

பிரதேச கவர்ன்மென்டார் ஸர்வே ஆபிஸர்களை நியமிப்பது.

4. (1) இந்த ஆக்டிற்கண்ட சகல காரியங்களுக்காவது அவைகளில் எதற்காகவாவது ஸர்வே ஆபிஸராயிருக்கும்படி யாதொரு நபரைப் பெயரைக்கொண்டாகிலும் அவருடைய உத்தியோகத்தை அனுசரித்தாகிலும் விளம்பரமூலமாய்ப் பிரதேச கவர்ன்மென்டார் நியமிக்கலாம்.

ஸர்வே ஆபிஸரின் அதிகார வரம்பைப் பிரதேச கவர்ன்மென்டார் தீர்ணயிப்பது.

(2) பிரதேச கவர்ன்மென்டாருடைய மேல்விசாரணைக்கும், இதுவிஷயத்தில் அவர்களால் நியமிக்கப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது அதிகாரியின் மேல்விசாரணைக்கும் உட்பட்டு, மேலே கண்டபடி நியமிக்கப்பட்ட ஒவ்வொரு நபரும் - பிரதேச கவர்ன்மென்டார் கட்டளையிடக்கூடிய பிரதேச எல்லைகளுக்குள்ளும் கால அளவுகளுக்கும், ஸர்வே ஆபிஸருக்குள்ள அதிகாரங்களையும் கடமைகளையும் செலுத்தி நிறைவேற்றவேண்டும்.

மேல்விசாரணை அதிகாரங்களைப் பிரதேச கவர்ன்மென்டார் வேறொருவருக்குப் பிரித்துக் கொடுக்கலாமென்பது.

(3) பிரதேச கவர்ன்மென்டார் - (1), (2) குறிப்பிட்ட உட்பிரிவுகளின்படி தங்களுக்குள்ள அதிகாரங்களைத் தங்களுக்குத் தகுதியாகத் தோற்றுகிற உத்தியோகஸ்தருக்காவது அதிகாரிக்காவது பிரித்துக் கொடுக்கலாம்.

2-ம் அத்தியாயம்.

கவர்ன்மென்ட் நிலங்களை ஸர்வே செய்வது.

கவர்ன்மென்ட் நிலத்தையாவது அந்த நிலத்தின் யாதொரு எல்லையையாவது ஸர்வே செய்யும்படி பிரதேச கவர்ன்மென்டார் கட்டளையிடலாமென்பது.

5. யாதொரு கவர்ன்மென்ட் நிலத்தையாவது அப்படிப்பட்ட நிலத்தின் யாதொரு எல்லையையாவது கவர்ன்மென்ட் நிலத்துக்கும் கவர்ன்மென்ட் நிலமல்லாத மற்ற நிலத்துக்கும் பொதுவான ஹத்தாக இருக்கும் எல்லையையாவது ஸர்வே செய்யும்படி பிரதேச கவர்ன்மென்டாராகிலும் பிரதேச கவர்ன்மென்டாரின் மேல்விசாரணைக்குட்பட்டு, அவர்களால் இந்த அதிகாரம் யாருக்குப் பிரித்துக் கொடுக்கப்படக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தர் அல்லது அதிகாரியாகிலும் விளம்பரமூலமாக உத்தரவு செய்யலாம்.

ஸர்வே ஆபிஸர்கள் விளம்பரம் பிரசுரிக்கவேண்டுமென்பது.

6. (1) 5-வது பிரிவின்படி யாதொரு ஸர்வே செய்யப்படவேண்டுமென்று உத்தரவு செய்யப்பட்டால், ஸர்வே ஆபிஸரானவர் - ஸர்வே செய்யும்படி உத்தரவாயிருக்கிற நிலத்தில் அல்லது எல்லைகளில் எவ்விதமாகவேனும் பற்றுள்ளவர்களாயிருக்கும் சகல நபர்களையும், எல்லைகளைக் காட்டும்பொருட்டும் அதுசம்பந்தமாக சங்கதி தெரிவிக்கும் பொருட்டும் நேராகவாகிலும் ஏஜென்ட் மூலமாகவாகிலும் குறிக்கப்பட்ட இடத்திலும் காலத்திலும் அதற்குப் பிறகு அப்போதைக்கப்போது அழைக்கப்படும்போதும் ஹாஜராகவேண்டுமென்று கண்டு நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாய் விளம்பரம் பிரசுரிக்கவேண்டும்.

அப்படிப்பட்ட விளம்பரமானது அதில் சம்பந்தப்பட்ட நபர்களுக்கு சட்டசம்மதமான அறிக்கையாகுமென்பது.

(2) (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி பிரசுரிக்கப்படும் விளம்பரமானது - ஸர்வே செய்யும்படி உத்தரவாயிருக்கிற நிலத்தில் அல்லது எல்லைகளில் யாதொரு பற்றுள்ள ஒவ்வொருவருக்கும் செய்யப்பட்ட சட்டசம்மதமான அறிக்கையாக எண்ணப்படும்.

ஸர்வே ஆபிஸர் நிர்ணயிக்கப்பட்ட விதமாய் ஸர்வே நடத்தி முடிக்கவேண்டுமென்பது.

7. ஸர்வே ஆபிஸரானவர் நிர்ணயிக்கப்பட்ட விதமாய் ஸர்வே நடத்தி முடிக்கவேண்டும்.

ஸர்வே செய்யப்பட்ட நிலங்களில் அக்கறையுள்ள நபர்கள்மேல் செலவை ஏற்றுவது.

8. 5-வது பிரிவின்படி பிரசுரிக்கப்பட்ட யாதொரு ஸர்வேயில் அமர்த்திக்கொள்ளப்பட்ட வேலையாட்களுக்காகவும் உபயோகிக்கப்பட்ட ஸர்வே அடையாளங்களுக்காகவும் பிடித்த ஏதேனும் செலவை, நிர்ணயிக்கப்பட்ட விதமாய்த் தீர்மானிக்கவேண்டியதுமல்லாமல், ஸர்வே செய்யும்படி உத்தரவாயிருக்கிற நிலத்தில் அல்லது எல்லைகளில் யாதொரு பற்றுள்ள நபர்களுக்குள்ளே பங்கிடு செய்யவும்வேண்டும்; மேலும், ஷை செலவுத் தொகையானது - நிலத்தீர்வை பாக்கியைப்போல அப்படிப்பட்ட நபர்களிடமிருந்து வசூல் செய்யப்படத்தக்கதாகும். அந்தப்படி தீர்மானித்ததையும் பங்கிடு செய்ததையுங் குறித்து ஷை நபர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாய் நோடிஸ் கொடுக்கவேண்டும்.

தகரார் ஏற்பட்டிராத எல்லையைத் தீர்மானித்துப் பதிவுசெய்ய ஸர்வே ஆபிஸருக்குள்ள அதிகாரம்.

9. (1) எந்த எல்லையின் விஷயமாக யாதொரு தகரார் ஏற்பட்டிருப்பதாகத் தமக்குத் தெரிவிக்கப்படவில்லையோ அப்படிப்பட்ட யாதொரு எல்லையை ஸர்வே ஆபிஸரானவர் தீர்மானித்துத் தகரார் ஏற்பட்டிராததாக அதைப் பதிவு செய்ய அதிகாரம் உடையவராவார்.

இதனால் பாதிக்கப்பட்ட நிலங்களின் ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரார்களுக்கு நோடிஸ் கொடுப்பது.

(2) 9-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஸர்வே ஆபிஸரால் செய்யப்படும் ஒவ்வொரு தீர்மானத்தைப்பற்றியும், எந்த நிலங்களின் எல்லைகள் ஷை தீர்மானத்தினால் பாதிக்கப்படக்கூடுமோ அந்த நிலங்களின் ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரார்களுக்கு நிர்ணயிக்கப்பட்டவிதமாய் நோடிஸ் கொடுக்கவேண்டும்.

தகரார் ஏற்பட்டிருந்தும் எல்லையைத் தீர்மானித்துப் பதிவுசெய்ய ஸர்வே ஆபிஸருக்குள்ள அதிகாரம்.

10. (1) யாதொரு எல்லையைப்பற்றித் தகரார் ஏற்பட்டால், ஸர்வே ஆபிஸரானவர் - தமக்கு அவசியமாகத் தோற்றும் விசாரணையைச் செய்த பிறகு, அந்த எல்லையைத் தீர்மானித்து அதைத் தம்முடைய தீர்மானத்தின் பிரகாரம் பதிவு செய்துவைக்கவேண்டும். ஸர்வே ஆபிஸர் - தாம் அந்தப்படி தீர்மானிப்பதற்குள்ள காரணங்களை எழுதிவைக்கவேண்டும்.

தகராருக்குச் சம்பந்தப்பட்ட கட்சிக்காரார்களுக்கும் (தீர்மானத்தினால்) பாதிக்கப்பட்ட நிலத்தின் ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரார்களுக்கும் நோடிஸ் கொடுப்பது.

(2) 10-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஸர்வே ஆபிஸரால் செய்யப்படும் ஒவ்வொரு தீர்மானத்தைபபற்றியும், தகராருக்குச் சம்பந்தப்பட்ட கட்சிகாரார்களுக்கும் எந்த நிலங்களின் எல்லைகள் ஷை தீர்மானத்தினால் பாதிக்கப்படக்கூடுமோ அந்த நிலங்களின் ரெஜிஸ்டரான இதர கைப்பற்றுதாரார்களுக்கும், நிர்ணயிக்கப்பட்டவிதமாய் நோடிஸ் கொடுக்கவேண்டும்.

8-வது, 9-வது அல்லது 10-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளின்மேல் அப்பீல்.

11. (1) 8-வது, 9-வது அல்லது 10-வது பிரிவின்படி செய்யப்படுகிற தீர்மானத்தினால் பாதிக்கப்படும் யாதொரு நபர் நிர்ணயிக்கப்பட்ட உத்தியோகஸ்தரிடத்தில் அப்பீல் செய்துகொள்ளலாம். அப்பீல் அதிகாரியின் தீர்மானத்தை, அதற்குள்ள காரணங்கள் சகிதமாய் எழுத்துமூலமாகப் பதிவு செய்யவேண்டும்; மேலும், அந்தத் தீர்மானத்தைக் குறித்து அப்பீலுக்குச் சம்பந்தப்பட்ட கட்சிக்காரார்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாய் நோடிஸ் கொடுக்கவேண்டும். ஸர்வே ஆபிஸரின் தீர்மானத்தில் செய்யும்படி அப்பீல் அதிகாரியால் உத்தரவிடப்படும் யாதொரு திருத்தமானது - சந்தர்ப்பத்துக்கேற்ற பிரகாரம் 9-வது அல்லது 10-வது பிரிவின்படி தயார்செய்யப்படுகிற ரெகார்டில் குறித்துவைக்கப்படும்.

(2) 10-வது பிரிவின்படியாவது 11-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாவது செய்யப்பட்ட உத்தரவுக்கு ஒரு நகலையும், 9-வது பிரிவின்படியாகிலும் 10-வது பிரிவின்படியாகிலும் 11-வது பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படியாகிலும் தீர்மானிக்கப்பட்டபடிக்குள்ள எல்லைகளின் விஷயமாய்ச் செய்யப்பட்ட உத்தரவுக்கு ஒரு நகலையும், சந்தர்ப்பத்துக்கேற்றபடி அந்த உத்தரவுகளில் பற்றுள்ள யாதொரு நபர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேலும் அவருடைய செலவிலும் அவருக்குச் சவதரிக்கவேண்டும்.

இன்ன கால அளவுக்குள் அப்பீல் செய்துகொள்ள வேண்டுமென்பது.

12. (a) 11-வது பிரிவின்படிக்கான அப்பீலை, 8-வது, 9-வது அல்லது 10-வது பிரிவின்படிக்கான நோடிஸ் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதத்துக்குள் செய்துகொள்ளவேண்டும்; ஆனால், ஷை தீர்மானத்தின் நகலையும் படத்தின் நகலையும் பெறுவதற்காகப் பிடிக்கும் காலமானது அப்பீலுக்காகக் கொடுக்கப்பட்டிருக்கும் மூன்று மாத கால அளவில் அடங்காது.

விலக்கு நிபந்தனை.

(b) ஷை கால அளவு கழிந்துபோனபிறகு செய்துகொள்ளப்படும் எந்த அப்பீலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது; ஆனால், ஷை கால அளவுக்குள் அப்பீல் செய்துகொள்ளாததற்கு அப்பீல்தாராருக்கு நியாயமானதும் போதுமானதுமான காரணம் இருந்ததென்று அப்பீல் அதிகாரி தெரிந்து திருப்தியடைவதன்மேல், அவர் - ஷை கால அளவு கழிந்துபோன பிறகு யாதொரு அப்பீலை ஏற்றுக்கொள்ளலாம்.

விவரணம்.—8-வது, 9-வது அல்லது 10-வது பிரிவின்படிக்கான நோடிஸானது அப்பீல்தாராருக்கு நேரில் சேர்ப்பிக்கப்படவில்லையென்பதே, மேலேகண்ட விலக்கு நிபந்தனையின் தாற்பரியப்படி நியாயமானதும் போதுமானதுமான காரணமாயிருப்பதாகக் கொள்ளப்படும்.

(c) 13-வது பிரிவில் குறிப்பிடப்பட்டிருக்கும் விளம்பரம் வெளிவிடப்பட்ட பிறகு (b) குறிப்பிட்ட உட்பிரிவின்படி எந்த அப்பீலும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

எல்லைக்குறிப்பு ஏற்படுத்தும் விஷயம் முடிவானதைப் பிரசித்தம் செய்யவேண்டுமென்பது.

13. 5-வது பிரிவின்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்டிருக்கும் யாதொரு நிலம் அல்லது எல்லையின் ஸர்வேயானது 9, 10 அல்லது 11-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகளை அனுசரித்து முடிவடைந்திருந்தால், ஸர்வே ஆபிஸர் அந்த விஷயத்தை டிஸ்ட்ரிக்ட் கெஜெட்டில் பிரசித்தம் செய்யவேண்டும்; மேலும், அப்படிப்பட்ட விளம்பரத்துக்கு நகல் ஒன்றைப் பிரஸ்தாப ஸர்வே எந்த கிராமத்துக்குச் சம்பந்தப்படுகிறதோ அந்த கிராமத்தில் கிராமச்சாவடி ஏதாகிலும் இருந்தால் அங்கே ஒட்டவேண்டும்; அந்தப்படி பிரசித்தம் செய்யப்பட்ட ஸர்வேயானது 14-வது பிரிவில் கண்ட நிபந்தனைகளின்படி யாதொரு ஸிவில் கோர்ட்டாரால் பிறப்பிக்கப்பட்ட டிக்ரியை அனுசரித்துத் திருத்தப்பட்டாலன்றி மற்றப்படி, அந்த ஸர்வே ரெகார்டானது - அதில் தீர்மானித்துப் பதிவு செய்யப்பட்டிருக்கும் எல்லைகள் சரியாய்த் தீர்மானித்துப் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன என்பதற்கு முடிவான ருஜுவாகும்.

1908-ம் வருஷத்து 9-வது ஆக்ட்.

ஸர்வே செய்யப்பட்ட சொத்தின் எல்லை விஷயமாய் கொண்டாடப்படும் பாத்தியதைகளை ஸ்தாபிப்பதற்காக மூன்று வருஷத்துக்குள் ஸிவில் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டு வருவது.

14. எந்த நபராகிலும் 9, 10 அல்லது 11-வது பிரிவின்படி யாதொரு எல்லை தீர்மானிக்கப்பட்டிருப்பதனால் துன்பம் அடைந்திருப்பதாகக் கருதுகிறபட்சத்திலே, அவர் - 1908-ம் வருஷத்திய இந்துதேசத்துக் கால நிர்ணயச் சட்டத்தின் 2-ம், 3-ம் பாகங்களில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, 13-வது பிரிவின்படி விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருஷத்திற்குள்ளாக, ஷை தீர்மானத்தை ரத்துசெய்யவேண்டுமென்றாவது திருத்தவேண்டுமென்றாவது வியாஜ்ஜியம் கொண்டுவரலாம்; அதன்மேல், அந்த ஸர்வேயானது வியாஜ்ஜியத்தில் முடிவாய்ப் பிறப்பிக்கப்பட்ட டிக்ரியை அனுசரித்த அவசியமானால் மாற்றப்படுவதுடன், மாறுதல் ஏதாகிலுமிருந்தால் அதுவும் ரெகார்டில் குறித்துக்கொள்ளப்படும்.

அந்த வியாஜ்ஜியத்தில் வாதியாயிருப்பவர் - வியாஜ்ஜியத்தின் விஷயமாகிய எல்லையில் பற்றுள்ளவர்களென்று தாம் நம்புவதற்கு நியாயமிருக்கிற சகல நபர்களையும் அதன் கட்சிக்காரர்களாகச் சேர்க்கவேண்டும்.

ஸர்வே அடையாளங்களைப் பாதுகாப்பதற்கு ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரர்கள் உத்தரவாதியாவது.

15. (1) இதுவிஷயமாய் நிர்ணயிக்கப்படக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு, கவர்ன்மெண்ட் நிலத்தை வைத்துக்கொண்டிருக்கிற ஒவ்வொரு ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரரும் - தம்முடைய கைப்பற்று நிலத்தின் எல்லைகளின்மேலாவது எல்லைகளுக்குள்ளாவது இருக்கிற ஸர்வே அடையாளங்களைப் பாதுகாக்கவும் புதுப்பிக்கவும் செப்பனிடவும் கடமைப்பட்டவராவார்; அவர் அந்தப்படி செய்யத்தவறுகிறபட்சத்திலே, ஸர்வே ஆபிஸராவது கலெக்டராவது - பிரதேச கவர்ன்மெண்டாருடைய செலவில், அந்த ஸர்வே அடையாளங்களைப் பாதுகாத்துப் புதுப்பித்துச் செப்பனிடுவதுமல்லாமல், அந்தப்படி செய்வதற்காகப் பிடிக்கும் செலவை நிச்சயித்துப் பங்கிடு செய்து, அந்த செலவை நிலத்தீர்வை பாக்கியைப்போல வசூலும் செய்யலாம். அந்த செலவில் மேலேகண்டபடி புதுப்பிப்பது அல்லது செப்பனிடுவது சம்பந்தமாய் நடத்தப்படும் சகல வேலைகளுக்காகவும் பிடிக்கும் செலவு அடங்கலாம்; ஆனால், ஸர்வே ஆபிஸர்களுக்காகவும் மேற்பார்வையிடும் சிப்பந்திக்காகவும் பிடிக்கும் எந்த செலவும் அதில் அடங்காது.

ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரருக்கு நோடிஸ்.

(2) யாதொரு ஸர்வே ஆபிஸராவது கலெக்டராவது எவையேனும் ஸர்வே அடையாளங்களைப் பாதுகாப்பதற்கு, புதுப்பிப்பதற்கு அல்லது செப்பனிடுவதற்குமுன், அவர் - நிர்ணயிக்கப்பட்ட மாதிரியாய் எழுத்துமூலமான நோடிஸ ஒன்றை ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரருக்குச் சேர்ப்பித்து, அதில் எந்த ஸர்வே அடையாளங்கள் விஷயமாய் ஷை வேலைகள் செய்யப்படவில்லையோ அந்த ஸர்வே அடையாளங்களைக்குறித்த விவரங்களைக் காணவேண்டியதுமல்லாமல், அந்த நோடிஸ் சேர்ப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து 15 தினங்களுக்குக் குறையாமல் அதில் குறிப்பிடப்படக்கூடிய காலத்துக்குள் அவைகளைப் பாதுகாக்கவேண்டுமென்றாவது புதுப்பிக்கவேண்டுமென்றாவது செப்பனிடவேண்டுமென்றாவது அதன்மூலமாய் உத்தரவுசெய்யவும்வேண்டும்.

பயிரிடுகிறவருக்காவது அக்கறையுள்ள வேறே நபருக்காவது நோடிஸ் கொடுப்பது.

(3) (2) குறிப்பிட்ட உட்பிரிவின்படிக்கான நோடிஸை ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரருக்கு நேரில சேர்ப்பிக்கமுடியாவிட்டால், அதற்கு நகல் ஒன்றை பயிரிடுகிறவருக்கும் அல்லது பிரஸ்தாப நிலத்தில் அக்கறையுள்ள வேறே நபருக்கும் சேர்ப்பிக்கவேண்டும்.

கிராம உத்தியோகஸ்தர்களின் கடமைகள்.

16. ஒவ்வொரு கிராமப்பெரியதனக்காரரும் ஒவ்வொரு கிராமக் கணக்கரும்—

(a) தம்முடைய அதிகார எல்லைகளிலாவது அவைகளுக்குள்ளாவது ஏற்படுத்தியிருக்கிற யாதொரு ஸர்வே அடையாளத்தை அழிப்பதையாகிலும் கெடுப்பதையாகிலும் அப்புறப்படுத்துவதையாகிலும மாற்றுவதையாகிலும் தடுப்பதும்,

(b) அப்படிப்பட்ட யாதொரு அடையாளம் அழிக்கப்பட்டதென்றாவது கெடுக்கப்பட்டதென்றாவது அப்புறப்படுத்தப்பட்டதென்றாவது மாற்றப்பட்டதென்றாவது அவருக்குத் தெரியவரும்போது, நிர்ணயிக்கப்பட்ட உத்தியோகஸ்தருக்கு அதைக் குறித்து ரிபோர்ட் செய்வதும்

அவர்களுடைய கடமையாகும்.

3-ம் அத்தியாயம்.

பூஸ்திதிகளை ஸர்வே செய்வது.

சில விஷயங்களில் யாதொரு பூஸ்திதியை ஸர்வே செய்யும்படி பிரதேச கவர்ன்மெண்டார் கட்டளையிடலாமென்பது.

17. (a) யாதொரு பூஸ்திதிக்குடையவராவது அதிலுள்ள யாதொரு எல்லையின் விஷயத்தில் அந்த எல்லையில் பற்றுள்ளவராயிருக்கும் யாதொரு நபராவது எழுத்துமூலமாய் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், அல்லது

(b) அப்படிப்பட்ட விண்ணப்பம் இராமலேயே,

(i) முன்னிலும் நன்றாய் அல்லது அதிக சௌகரியமாய் நீர்ப்பாய்ச்சல் வரி விதிப்பதற்காகிலும் வசூல்செய்வதற்காகிலும்,

(ii) விளம்பரம் பிரசுரிப்பதற்கு முன் எழுதிவைக்கப்படவேண்டிய வேறே யாதொரு காரணத்தைக்கொண்டாகிலும்

ஷை பூஸ்திதியையாவது அதன் யாதொரு பாகத்தையாவது அதிலுள்ள யாதொரு எல்லையையாவது ஸர்வேசெய்வது அவசியமாயிருக்கிறதென்று பிரதேச கவர்ன்மெண்டார் அபிப்பிராயப்படுகிறபோது,

அப்பிரகாரமே ஸர்வே செய்யும்படி பிரதேச கவர்ன்மெண்டாராகிலும், பிரதேச கவர்ன்மெண்டாருடைய மேல்விசாரணைக்குட்பட்டு, அவர்களால் யாருக்கு இந்த அதிகாரம் பிரித்துக்கொடுக்கப்படக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தராகிலும் அதிகாரியாகிலும் விளம்பரமூலமாய்க் கட்டளையிடலாம் :

ஆனால், (1) (a) குறிப்பிட்ட பகுதியின்படி விண்ணப்பம் செய்துகொள்ளுகிற யாதொரு நபர் - ஸர்வே செய்வதற்காகப் பிடிக்கும் செலவு முழுவதையும் தாம் செலுத்துவதாகவும், வேண்டுமானால் அந்தத் தொகையை ஸர்வே ஆரம்பமாவதற்கு முன்னமேயே ஒரு ஸர்க்கார் கஜானாவில் கட்டிவைப்பதாகவும் கண்டெழுதியுள்ள ஒரு ஸ்டேட்மெண்டில் தாம் கையெழுத்துபோட்டு அதைத் தம்முடைய விண்ணபபத்துடன் அனுப்பவேண்டும்; மேலும், (2) அந்தப் பகுதியின்படி தொடங்கப்பட்ட யாதொரு ஸர்வேயானது - (b) குறிப்பிட்ட பகுதியின்பிரகாரம் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக்கொண்டு ஷை ஸர்வேயை நடத்திவரும்படி உத்தரவுசெய்ய நியாயமிருப்பதாகப் பிரதேச கவர்ன்மெண்டாருக்குத் தோற்றினாலன்றி மற்றப்படி, விண்ணப்பதாரர் தாம் செய்துகொண்டிருக்கும் விண்ணப்பத்தை ரத்துசெய்துகொள்வாராகில், நிறுத்திவிடப்படலாம்.

ஸர்வே நடக்கும்போது அனுசரிக்கவேண்டிய நடவடிக்கைமுறை.

18. 19-வது, 20-வது பிரிவுகளில் நிபந்தனை கண்டிருக்கிறபடிக்கன்றி மற்றப்படி, ஷை ஸர்வே நடத்துவதைக்குறித்தும ஸர்வே ஆபிஸருடைய நடவடிக்கைகளைக் குறித்தும், கவர்ன்மெண்ட் நிலங்களின் ஸர்வே விஷயமாக 2-ம் அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கிற முறைமையின்படி கூடியவரையில் ஒழுங்கேற்படுத்தப்படும்; மேலும், ஸர்வே ஆபிஸருடைய உத்தரவுகளின்மேல் செய்துகொள்ளப்படும் அப்பீல்களைக்குறித்தும், அவைகளுக்கு நகல் கொடுப்பதைக்குறித்தும், அப்படிப்பட்ட உத்தரவுகளினாலும் அவைகளின்மேல் செய்துகொள்ளப்படும் அப்பீல்களில் பிறப்பிக்கப்படும் தீர்மானங்களினாலும் விளையத்தக்க பலனைக் குறித்தும், அப்படிப்பட்ட உத்தரவுகள் விஷயமாகவும் தீர்மானங்கள் விஷயமாகவும் வியாஜ்ஜியம் தொடர்வதற்குள்ள பாத்தியதையைக்குறித்தும் ஷை அத்தியாயத்திலுள்ள நிபந்தனைகள் - இந்த அத்தியாயத்தின்படி ஸர்வே ஆபிஸரால் பிறப்பிக்கப்படும் சகல உத்தரவுகளுக்கும், அப்படிப்பட்ட உத்தரவுகளின்மேல் செய்துகொள்ளப்படும் அப்பீல்களில் பிறப்பிக்கப்படும் தீர்மானங்களுக்கும் கூடியவரையில் பிரயோகப்படும்.

ஸர்வே செய்வதற்காகப் பிடிக்கும் செலவு பூஸ்திதிக்குடையவரிடத்திலிருந்து வசூலிக்கப்படத் தக்கதாகுமென்பது.

19. 17-வது பிரிவைச் சேர்ந்த (a) குறிப்பிட்ட பகுதியின்படி உத்தரவிடப்பட்ட ஸர்வே காரணமாக பிரதேச கவர்ன்மெண்டாருக்குப் பிடித்திருக்கும் சகல செலவும் - எதன் விஷயமாய் ஸர்வே செய்யும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறதோ அப்படிப்பட்ட பூஸ்திதியிலாவது பூஸ்திதியின் பாகத்திலாவது எல்லையிலாவது யாதொரு பற்றுள்ள நபர்களிடமிருந்து, நிலத்தீர்வை பாக்கியைப்போல வசூல் செய்யப்படத்தக்கதாகும்; 17-வது பிரிவைச் சேர்ந்த (b) குறிப்பிட்ட பகுதியிற்கண்ட (i) அடையாளமிட்ட உட்பகுதியின்படியும் (ii) அடையாளமிட்ட உட்பகுதியின்படியும் உத்தரவு செய்யப்பட்ட ஸர்வேயின்பொருட்டு பிடித்த செலவானது - அந்தந்த காலத்

தில் செலாவணியாய்க்கொண்டிருக்கும் யாதொரு சட்டத்தினால் வேறே விதமாய் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, பிரதேச கவர்ன்மெண்டாரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிடித்த செலவை ஸர்வே செய்யப்பட்ட நிலங்களுக்குள் பங்கீடு செய்யும்படி பிரதேச கவர்ன்மென்டார் கட்டளையிடலாமென்பது.

20. (1) எந்த பூஸ்திதியில் யாதொரு ஸர்வே செய்யப்பட்டிருக்கிறதோ அந்த பூஸ்திதிக்குடையவர் விண்ணப்பம் செய்துகொள்வதன்மேல், பிரதேச கவர்ன்மென்டாராவது அவர்களால் இந்த அதிகாரம் யாருக்குப் பிரித்துக் கொடுக்கப்படக்கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு உத்தியோகஸ்தராவது அதிகாரியாவது - ஸர்வே செய்யப்பட்டிருக்கும் நிலங்களின் கைப்பற்றுதாரர்களுக்குள்ளாகிலும், ஸர்வே செய்யப்பட்டிருக்கும் எல்லைகளில் பற்றுள்ள நபர்களுக்குள்ளாகிலும், அந்த ஸர்வே செய்வதற்காகப் பிடித்த செலவு முழுவதையுமாவது குறிப்பிடப்பட்ட அதன் யாதொரு பாகத்தையாவது பங்கீடு செய்யும்படி ஸர்வே ஆபிஸருக்குக் கட்டளையிடலாம்; ஆனால், யாதொரு பூஸ்திதிக்குடையவரின் கீழுள்ள எந்த பாயக்காரியும் கவர்ன்மென்டாரின்கீழ் நேராக அந்த நிலத்தைக் கைப்பற்றில் வைத்திருந்தால் அந்த ஸர்வேயின்பொருட்டு எவ்வளவு செலுத்த உட்பட்டவராயிருப்பாரோ அதைக்காட்டிலும் அதிகமான ஒரு தொகையைச் செலுத்தும்படி அவரைக் கேட்கக்கூடாது.

இன்னவிதமாய்ப் பங்கீடு செய்யவேண்டுமென்பது.

(2) நிர்ணயிக்கப்பட்ட விதமாய் (1) குறிப்பிட்ட உட்பிரிவின்படி (செலவைப்) பங்கீடு செய்யவேண்டும்.

அந்தப்படி பங்கீடு செய்யப்படும் செலவு பூஸ்திதிக்குடையவரால் பாயக்காரிகளிடமிருந்து வசூல் செய்யப் படத்தக்கதாகுமென்பது.

(3) இந்தப் பிரிவின்படி பங்கீடு செய்யப்படும் தொகையானது யாதொரு பூஸ்திதிக்குடையவரின் பாயக்காரிகளால் செலுத்தப்படவேண்டியிருந்தால், அது நிலத்துக்குடையவருக்கு பாயக்காரியிடமிருந்து சேரவேண்டிய வாடகை பாக்கியாயிருந்தால் எப்படியோ அப்படியே வசூல் செய்யப்படத்தக்கதாகும்.

(4) இந்தப் பிரிவின் காரியத்துக்காகவும் 21-வது பிரிவின் காரியத்துக்காகவும் 'பாயக்காரி' என்னும் வார்த்தையில், வாடகையில்லாமல் கொடுக்கப்பட்ட நிலத்தைக் கைப்பற்றில் வைத்துக்கொண்டிருப்பவர் என்பதும் அடங்கும்.

யாதொரு பூஸ்திதி ஸர்வேயாகி முடிந்த பிறகு நடக்கவேண்டிய விஷயங்கள்.

21. 17-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட விளம்பரத்தை அனுசரித்து யாதொரு பூஸ்திதியாவது பூஸ்திதியின் பாகமாவது பூஸ்திதியிலுள்ள யாதொரு எல்லையாவது ஸர்வே செய்யப்பட்டால், ஸர்வே ஆபிஸரானவர் - அந்த ஸர்வே முடிந்ததைக் குறித்து டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்கும் பூஸ்திதிக்குடையவருக்கும் ரிபோர்ட் செய்யவேண்டும்; அதன்மேல், அடியிற்கண்ட விஷயங்கள் நடந்தேறவேண்டும்:—

பாயக்காரிகளின் கடமை.

(i) இது விஷயத்தில் நிர்ணயிக்கப்படக்கூடிய திட்டங்களுக்குட்பட்டு, ஸர்வே செய்யப்பட்ட நிலத்தின் ஒவ்வொரு பாயக்காரியும், பாயக்காரி எவரும் இராதபட்சத்திலே பூஸ்திதிக்குடையவரும் - தம்முடைய கைப்பற்று நிலத்தின் எல்லைகளிலாவது எல்லைகளுக்குள்ளாவது இருக்கிற ஸர்வே அடையாளங்களைப் பாதுகாக்கவும் புதுப்பிக்கவும் செப்பனிடவும் கடமைப்பட்டவராவார்; அவர் அந்தப்படி செய்யத் தவறுவாராகில், கலெக்டரானவர் - 15-வது பிரிவைச் சேர்ந்த (2), (3) குறிப்பிட்ட உட்பிரிவுகளிற்கண்ட மாதிரியாய் சந்தர்ப்பத்துக்கேற்றபடி பாயக்காரிக்காவது பூஸ்திதிக்குடையவருக்காவது நோட்டீஸ் கொடுத்த பிறகு பிரதேச கவர்ன்மென்டாருடைய செலவில், அப்படிப்பட்ட ஸர்வே அடையாளங்களைப் பாதுகாத்துப் புதுப்பித்துச் செப்பனிடுவதுமல்லாமல், அப்படிச் செய்வதற்கான செலவை நிலத்தீர்வை பாக்கியைப்போல வசூலும் செய்யலாம். அப்படிப்பட்ட செலவில், அந்தப்படி புதுப்பிப்பதற்கோ செப்பனிடுவதற்கோ சம்பந்தப்பட்ட சகல வேலைகளுக்காகவும் பிடிக்கும் செலவும் அடங்கலாம்; ஆனால், ஸர்வே ஆபிஸர்களின் பொருட்டும் மேற்பார்வையிடும் சிப்பந்தியின்பொருட்டும் ஏற்படுகிற யாதொரு செலவு அதில் அடங்காது.

கிராம உத்தியோகஸ்தர்களின் கடமைகள்.

(ii) முழுவதுமாவது ஒரு பாகமாவது ஸர்வே செய்யப்பட்டிருக்கும் ஒவ்வொரு கிராமத்தின் பெரியதனக்காரரும் கணக்கரும்—

(a) தம்முடைய கிராமத்தின் எல்லைகளிலாவது எல்லைகளுக்குள்ளாவது இருக்கும் யாதொரு ஸர்வே அடையாளத்தை அழிப்பதையாகிலும் கெடுப்பதையாகிலும் அப்புறப்படுத்துவதையாகிலும் மாற்றுவதையாகிலும் தடுப்பதும்,

(b) அப்படிப்பட்ட யாதொரு அடையாளம் அழிக்கப்பட்டதென்றாவது கெடுக்கப்பட்டதென்றாவது அப்புறப்படுத்தப்பட்டதென்றாவது மாற்றப்பட்டதென்றாவது தமக்குத் தெரியவரும்போது, அந்த விஷயத்தைக் குறித்து அந்த பூஸ்திதிக்குடையவருக்கும்

கலெக்டருக்கும் அல்லது கலெக்டருக்குக் கீழ்ப்பட்டவராய் டிஸ்ட்ரிக்ட் கலெக்டரால் அப்போதைக்கப்போது கட்டளையிடப்படக்கூடிய உத்தியோகஸ்தருக்கும் ரிபோர்ட் செய்வதும் அவர்களுடைய கடமையாகும்.

4-ம் அத்தியாயம்.

பலவகைப்பட்டவை.

நிலங்களில் பிரவேசித்துப் பரிசோதிக்கவும் அவைகளின் மேலுள்ள தடையைப் பரிஷ்கரிக்கவும் அதிகாரம்.

22. இந்த ஆக்டின்படி நடத்தப்படும் யாதொரு ஸர்வே, விசாரணை அல்லது வேறே நடவடிக்கையின் காரியங்களுக்காக, ஸர்வே செய்யப்பட்டுவரும் யாதொரு நிலத்தில் பிரவேசிக்கவும் அதைப் பரிசோதிக்கவும் அளக்கவும், ஸர்வே செய்யும் காரியங்களுக்காக எவ்வித மரங்கள், காடு, வேலிகள், அறுவடையாகாமலிருக்கிற பயிர்கள் அல்லது வேறே பெரிய தடைகளை வெட்டியாகிலும் அப்புறப்படுத்தியாகிலும் எல்லைகளையோ அல்லது வேறே ரேகைகளையோ பரிஷ்கரிப்பது அவசியமாயிருக்கக் கூடுமோ அப்படிப்பட்ட மரங்கள் முதலியவைகளை வெட்டி அல்லது அப்புறப்படுத்தி எல்லைகள் அல்லது ரேகைகளைப் பரிஷ்கரிக்கவும் ஸர்வே ஆபிஸருக்காவது டிஸ்ட்ரிக்ட் கலெக்டருக்காவது அந்த ஆபிஸர்களின் கீழ் இருக்கும் உத்தியோகஸ்தர்களில் எவருக்காவது அதிகாரம் உண்டு.

சாட்சிகளுக்கு ஸம்மன் அனுப்பவும், தஸ்தவேஜுகளை ஹாஜர் செய்யும்படி கேட்கவும் அதிகாரம்.

23. இதுவிஷயத்தில் பொதுவாகவாவது பிரத்தியேகமாகவாவது அதிகாரம் கொடுக்கப்பெற்ற யாதொரு ஸர்வே ஆபிஸராகிலும், டிஸ்ட்ரிக்ட் கலெக்டராகிலும், இந்த ஆக்டிலுள்ள நிபந்தனைகளில் யாதொன்றின்படி அப்பீல் செய்யப்பெற்ற யாதொரு உத்தியோகஸ்தராகிலும் - யாதொரு நிலத்தை ஸர்வே செய்வதற்கு உதவிசெய்யும் காரியத்துக்காக அதில் அக்கறையுள்ள யாதொரு நபருக்கு ஸம்மன் அனுப்பலாம், அவரைக் கட்டாயமாய் ஹாஜர் செய்விக்கலாம்; மேலும், அவர் - இந்த ஆக்டின்படிக்கான யாதொரு ஸர்வே விசாரணை அல்லது வேறே நடவடிக்கைகளின் காரியங்களுக்காக, சாட்சியம் கொடுப்பதற்காகவும் தஸ்தவேஜுகளை ஹாஜர் செய்விப்பதற்காகவும் யாதொரு நபருக்கு ஸம்மன் அனுப்பலாம், அவரைக் கட்டாயமாய் ஹாஜர்செய்விக்கலாம்; அல்லாமலும், சாட்சிகளுக்கு ஸம்மன் அனுப்பவும் கட்டாயமாய் ஹாஜர்செய்விக்கவும் சாட்சியத்தை எழுதிவைக்கவும் ஸிவில் ப்ரொஸீஜர் கோடில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை முறையை எவ்வளவு வரையில் பிரயோகப்படத்தக்கதாகச் செய்யக்கூடுமோ அவ்வளவுவரையில் அதை அனுசரிக்கவேண்டும்.

மத்தியஸ்தருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்புவது.

24. (1) இதுவிஷயத்தில் சம்பந்தப்பட்ட எல்லாக் கட்சிக்காரர்களுடைய சம்மதியையும் பெற்றுக்கொண்டு, டிஸ்ட்ரிக்ட் கலெக்டராவது ஸர்வே ஆபிஸராவது - எல்லையைக்குறித்த யாதொரு தகராரை மத்தியஸ்தருடைய அபிப்பிராயத்திற்கு அனுப்பலாம்.

(2) அந்த தீர்ப்பின்படி செய்யப்பட்ட டிஸ்ட்ரிக்ட் கலெக்டர் அல்லது ஸர்வே ஆபிஸருடைய தீர்மானமானது - அப்படிப்பட்ட மத்தியஸ்தர்களுக்குமுன் கட்சிக்காரர்களாயிருப்பவர்களுக்கும் அவர்களுக்குட்பட்டு தாவா செய்கிறவர்களுக்கும் முடிவானதாகும்.

பூஸ்திதிக்குடையவராவது ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரராவது தம்மால்செலுத்தப்பட்ட செலவுத் தொகையை பூஸ்திதி அல்லது கவர்ன்மெண்ட் நிலத்தின் சொந்தக்காரரிடத்திலிருந்து வசூல் செய்யலாமென்பதும், அவ்வளவு வரையில் அந்த நிலத்தின் மேல் பொறுப்பான பாத்தியதை அடையலாமென்பதும்.

25. (i) இதற்கு விரோதமாய் யாதொரு ஒப்பந்தம் இராத பட்சத்திலே, ஸர்வே செய்யப்பட்டவரும் யாதொரு பூஸ்திதி அல்லது கவர்ன்மெண்ட் நிலத்துக்குடையவராவது அதன் ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரராவது அப்படிப்பட்ட ஸர்வே விஷயமாய் இந்த ஆக்டின்படி யாதொரு செலவு செய்தாலும், அவரிடத்திலிருந்து யாதொரு செலவு வசூலிக்கப்பட்டாலும், அவர் - அதன் சொந்தக்காரராய் இராதபட்சத்திலே, அவருக்கு மேலே கண்டபடி பிடித்தோ அல்லது அவரிடத்திலிருந்து மேலேகண்டபடி வசூலிக்கப்பட்டோ உள்ள செலவுத்தொகையின்மேல் வருஷத்துக்கு நூற்றுக்கு 9 வீதம் வட்டி சகிதமாக ஏற்படும் தொகை அளவுக்கு அந்த பூஸ்திதி அல்லதுகவர்ன்மெண்ட் நிலத்தில் பொறுப்பான பாத்தியதை அடைவார்.

பூஸ்திதிக்குடையவர் அல்லது ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரரால் செலுத்தப்படத்தக்க செலவுத்தொகையை பாத்தியதை கொண்டாடுகிறவர் செலுத்தி பொறுப்பான பாத்தியதை அடையலாமென்பது.

(ii) ஸர்வே செய்யப்பட்டுவரும் யாதொரு பூஸ்திதி அல்லது கவர்ன்மெண்ட் நிலத்தில் பாத்தியதை கொண்டாடுகிற எந்த நபராவது அதற்குடையவராகவாகிலும் அதன் ரெஜிஸ்டரான கைப்பற்றுதாரராவாகிலும் இராமற்போனபோதிலும் அந்த பூஸ்திதி அல்லது கவர்ன்மெண்ட் நிலத்தின் ஸர்வே விஷயமாய் இந்த ஆக்டின்படி செலுத்தப்படத்தக்க செலவுகளைச் செலுத்துவது சட்டசம்மதமாகும்; மேலும், அப்படிப்பட்ட சகல தொகைகளையும் யாதொரு பாயக்காரியாவது குத்தகைதாரராவது செலுத்தியிருந்தால், அந்தத் தொகைகளை அப்படிப்பட்ட பூஸ்திதி அல்லது கவர்ன்மெண்ட்

நிலத்தின் விஷயமாய் அவர் அப்போது அல்லது அதற்குப் பிறகு செலுத்தவேண்டிய தாயிருக்கும் யாதொரு வாடகையிலிருந்து கழித்துக்கொள்ளலாம்; அல்லாமலும், ஷை பூஸ்திதியிலாவது கவர்ன்மெண்ட் நிலத்திலாவது பற்றுள்ளவராய் இருக்கிற அல்லது நல்ல எண்ணத்துடன் பாத்தியதை கொண்டாடுகிற வேறே யாதொரு நபர் மேலேகண்ட தொகைகளைச் செலுத்தியிருந்தால், அவை அப்படிப்பட்ட பூஸ்திதி அல்லது கவர்ன்மெண்ட் நிலத்தின்பேரில் பொறுப்பான செலவாக ஏற்படும். அந்தத் தொகைகளுக்கு வருஷத்துக்கு நூற்றுக்கு 9 வீதம் வட்டி கிடைக்கும்.

அப்படிப்பட்ட பொறுப்பின் அளவு.

(iii) இந்தப் பிரிவின்படி யாதொரு பூஸ்திதியிலாவது கவர்ன்மெண்ட் நிலத்திலாவது பொறுப்பான பாத்தியதைக்குரிய யாதொரு நபர் அந்த பூஸ்திதி அல்லது கவர்ன்மெண்ட் நிலத்தின் கூட்டுச்சொந்தக்காரராக இருந்தால், ஷை பொறுப்பான பாத்தியதையானது-அவரிடமிருந்து வசூலிக்கப்பட்டோ அல்லது அவரால் செலவிடப்பட்டோ அல்லது செலுத்தப்பட்டோ இருக்கிற தொகையில் ஷை பூஸ்திதி அல்லது கவர்ன்மெண்ட் நிலத்தில் இதர கூட்டுச் சொந்தக்காரர்களுக்குள்ள பங்கு விஷயமாய்ச் சேரவேண்டியிருக்கிற பாகத்துக்கும் மேலேகண்ட வீதப்படி வட்டிக்கும் மாத்திரமே செல்லவேண்டும்.

இந்த ஆக்டை அனுசரித்து பிரதேச கவர்ன்மெண்டார் விதிகள் செய்யலாமென்பது.

26. (1) இந்த ஆக்டின் காரியங்களை நிறைவேற்றுவதற்காகப் பிரதேச கவர்ன்மெண்டார்-முன்னதாய் பிரசித்தம் செய்து விதிகள் ஏற்படுத்தலாம்.

(2) முக்கியமாகவும் முந்திய அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு பாதகமில்லாமலும், அப்படிப்பட்ட விதிகளைக்கொண்டு—

(a) பற்பல பிரதேசங்களுக்கு ஸர்வே யூனிட்டையும் (பரிமாணத்தையும்), அதைச் சேர்ந்த உட்பிரிவுகளையும், ஸர்வே அடையாளங்களின் விவரத்தையும் நிர்ணயிக்கலாம்; மேலும், அந்த அடையாளங்களைப் பாதுகாப்பதற்காகவும் புதுப்பிப்பதற்காகவும் செப்பனிடுவதற்காகவும் ஏற்பாடு செய்யலாம்;

(b) ஸர்வே செய்யப்பட்டிருக்கிற அல்லது ஸர்வே செய்யப்படப்போகிற யாதொரு நிலத்தைக்குறித்து யாதொரு சங்கதியைச் சேகரித்து எழுதிவைப்பதற்காக ஏற்பாடு செய்யலாம்;

(c) இந்த ஆக்டின்படி அலுவல்செய்ய நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்களின் வகுப்புகளையும், அந்த உத்தியோகஸ்தர்களால் செலுத்தப்படவேண்டிய அதிகாரங்களையும் வரையறுக்கலாம்;

(d) இந்த ஆக்டின்படிக்கான நடவடிக்கைகளை நடத்துகையில் ஷை உத்தியோகஸ்தர்கள் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கைமுறையை நிர்ணயித்து ஒழுங்குபடுத்தலாம்;

(e) இந்த ஆக்டின்படி பிறப்பிக்கப்படும் சகல விளம்பரங்களையும் பிரசுரிப்பதற்காகவும், இந்த ஆக்டின்படி பிறப்பிக்கவேண்டியதாகவாவது தெரிவிக்கவேண்டியதாகவாவது கொடுக்கவேண்டியதாகவாவது சேர்ப்பிக்கவேண்டியதாகவாவது இருக்கிற சகல உத்தரவுகள் சங்கதிகள் நோடீஸுகள் ஆகிய இவைகளின் நமூனா விஷயமாகவும் இவைகளைப் பிறப்பிப்பதற்காகவும் சேர்ப்பிப்பதற்காகவும் ஏற்பாடு செய்யலாம்;

(f) இந்த ஆக்டின்படி பிரசித்தம் செய்யப்பட்ட ஸர்வேக்களுக்கு அவசியமான ஸர்வே அடையாளங்களையும் வேலை ஆள்களையும் இதர விஷயங்களையும் சவதரிப்பதைக் குறித்தும் அவைகள் சம்பந்தமாய்ப் பிடிக்கும் செலவுகளை வசூல் செய்யக்கூடிய இடங்களில் வசூலிப்பதைக்குறித்தும் ஒழுங்கேற்படுத்தலாம்;

(g) இந்த ஆக்டின்படி பங்கிடு செய்யும்படி கட்டளையிடப்பட்டிருக்கிற சகல செலவுகளையும் பங்கிடு செய்வதற்காகவும், அப்படிப்பட்ட யாதொரு ஸர்வேயில் அமர்த்திக் கொள்ளப்படும் வேலை ஆள்களையும் உபயோகிக்கப்படும் ஸர்வே அடையாளங்களையும் நிச்சயிப்பதற்காகவும் ஏற்பாடு செய்யலாம்;

(h) இந்த ஆக்டின்படி பிறப்பிக்கப்படும் ப்ராஸெஸ் என்னும் கட்டளைகளுக்காகவும் கொடுக்கப்படும் நகல்களுக்காகவும் செலுத்தப்படத்தக்க கட்டணங்களை நிர்ணயிக்கலாம்; மேலும்,

(i) இன்ன விதமாய் மத்தியஸ்தர்களை நியமிக்க வேண்டுமென்பதை நிர்ணயித்து, அவர்கள் அனுசரிக்கவேண்டிய நடவடிக்கை முறையைக்குறித்து ஒழுங்கேற்படுத்தலாம்.

(3) அப்படிப்பட்ட சகல விதிகளையும் சட்டநிரூபண சபையார் கூட்டங்கூடியிருக்கையில் இரண்டு மாதத்துக்குக் குறையாத ஒரு கால அளவுக்கு அந்த சபையார் முன் வைக்கவேண்டும்.

நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது அந்தப்படி செய்யப்பட்டதாகப் பொருள்படுகிற செய்கைகளுக்கு நிவாரணை.

27. இந்த ஆக்டின்படி நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகப் பொருள்படுகிற யாதொரு காரியத்துக்காக யாதொரு நபரின்மேல் கொண்டுவரப்படும் வியாஜ்ஜியமாவது சட்ட சம்பந்தமான வேறே நடவடிக்கையாவது நிற்காது.

ஆர். ராமசந்திர ராவ்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மெண்ட்

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.